**செய்தி வெளியீடு எண் : 2380** **நாள் : 30.11.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

சென்னை மாநகரை ஒட்டி அமைந்துள்ள செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நகர் புறத்தை ஒட்டிய ஊராட்சிகளில் நிலவும் குடிநீர், சாலை வசதி மற்றும் குப்பைகளை கையாளுவதில் உள்ள பிரச்சனைகள் குறித்து மாண்புமிகு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், அவர்களின் தலைமையில் இன்று(30.11.2023) தலைமைச் செயலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. பா.பொன்னையா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. சிவராசு, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. தட்சணாமூர்த்தி, இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய செயல் இயக்குநர், சென்னை மாநகராட்சி பிரதிநிதிகள், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சென்னை பெருநகரை ஒட்டியுள்ள ஊராட்சிகள் சந்தித்து வரும் குடிநீர் பிரச்சனைகள், குப்பைகள் கையாளுவது குறித்தும் சென்னை மாநகராட்சி மற்றும் மெட்ரோ குடிநீர் வாரியத்தின் மூலம் கூட்டாக மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன்படி சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் முன்மொழிவுகள் அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in